**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 04.09.2025

**அசல் வழக்கு எண்.352/2019**

**வா.சா.1 – , சண்முகம் த/பெ.சஞ்சீவி பிள்ளை**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கு தமிழ் நன்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நீங்கள் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் நான் பதினொன்றாம் வகுப்பு படித்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி சீனிவாசன் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய தம்பி ஆவார். உங்கள் தகப்பனார் பெயர் என்ன என்றால் கே சஞ்சீவி பிள்ளை ஆகும். உங்கள் தகப்பனாருக்கு நீங்கள் எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று ஆண் வாரிசுகள் இரண்டு பெண் வாரிசுகள் ஆகும். அவர்களுடைய பெயர் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும் கேசவ பிள்ளை சண்முகம் சீனிவாசன் நாகம்மாள் நிர்மலா ஆகிய ஐந்து நபர்கள் ஆகும். உங்களுடைய தகப்பனார் எப்பொழுது இறந்துவிட்டார் என்றால் கடந்த 01.01.2008ல் இறந்துவிட்டார் உங்களுடைய தாயார் எப்போது இறந்து விட்டார் என்றால் 17.06.2017இறந்துவிட்டார். நீங்கள் என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன் இதற்கு முன்பு காஞ்சிபுரத்தில் இருக்கும் பொழுது என்ன வியாபாரம் செய்தீர்கள் என்றால் நெல் வியாபாரம் செய்தேன் மண்டி வியாபாரம் செய்தேன் . நீங்கள் பதினோராம் வகுப்பு படித்ததாக சொல்கிறீர்கள் எப்பொழுது முடித்தீர்கள் என்றால் 1979 இல் முடித்தேன். நீங்கள் எப்பொழுது பெங்களூர் சென்று செட்டில் ஆனீர்கள் என்றால் 1993 செட்டில் ஆனேன். 1993 ஆம் ஆண்டு உங்களுக்கு திருமணம் நடைபெற்று விட்டதா என்றால் திருமணம் நடைபெற்று விட்டது. உங்களுக்கு திருமணம் அப்பா முன் நின்று சிறப்பாக செய்து வைத்தார் என்றால் சரிதான். உங்களுடைய ரேஷன் கார்டு ஆதார் கார்டு அனைத்தும் கர்நாடகா மாநிலம் சார்ந்த உள்ளது என்றால் சரிதான் உங்களை இன்னார் என்று நிரூபிக்க அதுதான் உள்ளது என்றால் சரிதான்.

உங்களுக்கும் சீனிவாசன் என்பவருக்கும் எத்தனை ஆண்டுகள் வித்தியாசம் என்றால் ஐந்து ஆண்டுகள் வித்தியாசம் இருக்கலாம். நீங்கள் 1993 ஆம் ஆண்டு பெங்களூரில் செட்டில் ஆன பிறகு உங்கள் உடன் பிறந்த சகோதரிகள் சகோதரர்கள் காஞ்சிபுரத்தில் கூட்டாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான் அவர்கள் உங்கள் தந்தையார் உடன் கூட்டாக வசித்தார்கள் என்றால் சரிதான் காஞ்சிபுரத்தில் நல்ல வாய்ப்பு வசதிகள் இருக்கும் பொழுது எதற்காக பெங்களூர் சென்று செட்டில் ஆனீர்கள் என்றால் அப்போது எனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது குடும்பத்தை பெங்களூருக்கு அழைத்துச் சென்று விட்டேன்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.